நெய்தல் நிலம் காட்டும் பழந்தமிழர்களின் வாழ்வியல்

இ. மார்ஜிலின் ஜின்ஸி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 20213094022022

முனைவர் ஜா.ஞா. ஜோனி ஜெபமலர்
துறைத் தலைவர், தமிழ்த்துறை ஆய்வகம்
முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி

முன்னுரை

நிலம் என்பது நிரந்தரமாக நீரில் மூழ்கியிராத புவியின் திண்ம மேற்பரப்பு ஆகும். மனித செயற்பாடுகள், வேளாண்மை, இயற்கை வளங்கள், அஃறிணைகளின் வாழ்வு போன்றவைகளின் இருப்பிடமாக நிலம் காணப்படுகிறது. பண்டைய தமிழகம் நிலத்தினைப் பயன்பாட்டின் அடிப்படையில் ஐந்திணைகளாக பிரித்துள்ளனர். அவற்றில் நெய்தல் நில மக்களின் வாழ்வியல் கூறுகளை ஆய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்

நிலமும் பொழுதும்

இறைவனின் படைப்பிற்கான களமாக அமைவது நிலம் உலகப் பொருள் அனைத்திற்கும் இதுவே அடிப்படையாக அமைந்திருப்பதால் மக்களின் அகவாழ்வு புறவாழ்வு ஆகியவற்றிக்கு களனாக இருப்பதாலும் முதற்பொருள்எனை முன்னிருத்துகின்றார் தொல்காப்பியர்

"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நூவலுங் காலை முறைசிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"

பொருள் என்பது பொருள் உணர்த்தினமைனால் சொல்லப்பட்ட சொல்லின் உணரப்படுவது. முதல், கரு, உரிப்பொருள் என மூவகைப்படும்.

"முதல் எனப்படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

முதல் பொருள் எனப்படுவது நிலம், காலம் என இருவகைப்படும். நிலம் எனப்படுவது நிலத்திற்கும் காரணமாகிய நீரும் நீர்க்குக் காரணமாகிய தீயும் தீயிற்குக் காரணமாகிய காற்றும் காற்றிற்குக் காரணமாகிய ஆகாயமும் என்பது பொருந்தும். காலம் என்பது மாத்திரை, முதல்நாழிகை, யாமம். பொழுது, நாள். பக்கம், திங்கள். இருது, அயநம், ஆண்டு, உகம் என்று பொருள்படும்.

உலகின் உயிர்கள் தோன்றுவதற்குக் களமாக உள்ளது நிலம் அந்நிலத்தை சார்ந்து காற்று, நீர், நெருப்பு, வானம் போன்றவற்றை நாம் ஐம்பெரும் பூதங்கள் என போன்றவற்றை நாம் ஐம்பெரும் பூதங்கள் என அழைத்து வருகின்றோம். இவை எல்லாம் உயிரினங்கள் வாழ்வதற்கும் அழிவதற்கும் ஏற்ற ஆற்றல் பெற்றுள்ளமையால் இவற்றைப் பூதங்கள் என்று அழைத்து வருகின்றோம். இவ்வுலகினைத் தொல்காப்பியர்.

"நிலம்தீ நீர்வளி விசும் பொடைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்று கூறுகின்றார் தொல்காப்பியர். இக்கருத்தினை ஒட்டியபடி இன்றைய புவியியல் வல்லுநர்கள் நிலவியல் பிரிவுகளை விளக்குகின்றனர். அவற்றுள் சில வளியியல் புவியியல் வானவியல் காலநிலையியல் கடலியல் போன்றன மேற்குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு விளக்கும் வகையில் இடம் பெற்றுள்ள புறநானூற்றுப் பாடல் வரிகள் சான்றாக அமைந்துள்ளது.

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"

இயற்கை ஐந்து கூறுகளால் ஆனது என்பதை நிலம், நீர், தீ, காற்று, வளி என்னும் ஐந்தும் கலந்த கலவை தான் இவ்வுலகம் ஆகும். இவை ஐந்தும் ஒன்றை ஒன்று பின்னி பிணைந்த பிணைப்பு ஆகும். நிலம் நீரோடும் நீர் தீயோடும் தீ காற்றோடும் காற்று வளியோடும் தொடர்பு கொண்டு உள்ளது. காற்று வானத்தோடு கொண்டுயிருந்தாலும் வானத்தை ஊடுருவிச் செல்லாது காற்று அகண்ட நீண்ட செறிந்த பெரிய கடலே எல்லையாகக் கொண்டும். காற்று நுழைந்து செல்ல முடியாத பரப்புடைய வானத்துடன் பொருந்தியும் நிலமென்னும் மண் செறிந்து காணப்படும் இவ்வுலகம் தீ காற்றால் அதிகமாகும் காற்று அதிகமானால் வானத்தை முட்டும் அளவிற்கு தீ எரியும். இவற்றிக்குப் புறநானூற்று பாடல் சான்றாக உள்ளது.

"காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவின"

ஐம்பெரும் பூதங்களின் கலப்பாலானது இவ்வுலகம் என்ற கருத்துக்கு தொல்காப்பியர்

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ழும்பால் இயல்நெரி வழாஅமைத்
தீரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்"

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களின் கலப்பாலானது இவ்வுலகம் உலகத்தில் உள்ள ஒவ்வொன்றும் ஐம்பெரும் பூதங்களால் உருவாகின்றன. இவை அனைத்தும் அழியும் போது ஐம்பெரும் பூதங்களாகவே பிரிகின்றன என்பது உண்மை மாற்றம் இல்லை அவ்வாறு உலகில் உள்ள உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணைகளும் ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் என்ற அடிப்படையில் கொண்டது.

நெய்தல் நிலத் தோற்றம்

மலைகளின் தோற்றத்தை அடுத்து கடலும் ஆறும் தோற்றியுள்ளன இதனை தணல் பிழப்பு குளிர்ந்து இறுகிப் பாறையில் படலமாகும் போது நீராவிப் படலம் தோன்றி உலகைச் சூழ்ந்து நின்றது. தணல் படலம் பாறைப் படலமாக மாறியவுடன் நீராவிப் படலம் குளிர்ந்து இடைவிடா மழையாகப் பொழியும். பொழிந்த நீர் ஊழிப் பெருக்கோடிப் பள்ளங்களில் தங்கியது இவ்வாறு தங்கிய அகன்ற ஆழமான பள்ளங்களே கடல்கள்.

நெய்தல் நில ஊர்கள்

கடற்கரையை அடுத்து மணற்பகுதியும் கடல் வளத்தை நம்பி வாழும் மக்கள் குடிக் கொண்டு இருக்கும் இடம் ஆகும். இங்கு உள்ள இடம் கடலையடுத்தும்உப்பாங்கியை அடுத்தும் தாழை வேலிகளுடன் காணப்பட்டன. பாக்கம் என அழைக்கப்படும் இவ்விடத்திற்கு நற்றிணை பாடல் சான்று.

"முற்றா மஞ்சட் பசும் புறம் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ் கழி இறவின்
கணம் கொள் குப்பை உணங்கு திறன் நோக்கி
புன்னை அம்கொழு நிழல் முன்உய்த்துப் பரப்பும்
துறை நணி இருந்த பாக்கமும் உறைநனி"

உப்பங்கழியிடத்தில் இறா மீன்குவியல்களைப் புன்னை மரநிழலில் உலர்த்தும் இடம் இல்லாமலும் அதனருகில் உள்ள பாக்கம் வருத்தும் தராமல் இனிமையாக பரதவர் மகளை பார்த்ததால் இந்த இடம் இனிமையாக அமைந்தது. ஆகையால் இவை பாக்கம் என்று அழைக்கப்பட்டது.

மக்களின் தொழில்

நெய்தல் நில மக்கள் தம்பிள்ளைகளோடு கூடி கடல் ஆறு குளங்கள் போன்ற நீர் நிலைகளிலும் மீன்களைப் பிடிப்பார்கள். பண்டைக் காலத்தில் பெருமணல் நிலம் எனத் தொல்காப்பியர் கூறும் நெய்தல் எனப்பட்ட தமிழ்நாட்டுக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம் போன்ற நிலப்பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களைப் போல் நெய்தல் நிலமக்களும் நிலத்தில் எவ்வித

தானியங்களை விதைத்து பொருள் உற்பத்தி செய்யவில்லை. அவர்கள் வாழ்ந்த பகுதி விவசாயம் செய்ய தகுதியற்ற நிலமாகயிருந்த காரணத்தால் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுப்பட்டனர். ஏனென்றால் கடற்கரை பகுதி மணற்பகுதி என்பதால் எந்த பயிர்களும் பயிர்செய்ய முடியாது. கடலில் மீன் பிடிப்பது இவர்களின் தொழிலாகும். இவர்களைச் சங்க இலக்கியங்களில் பரதவர் எனக் குறிப்பிடுகின்றனர். மீன்பிடி தொழில் செய்வதால் கானல் அம் சிறுகுடிக் கடல்மேகம் பரதவர், பெருங்கடல் பரதவர் என்று அழைப்பர்

மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் மக்கள் அவரவர் இனத்திற்கு ஏற்றார் போல் கருவிகளைப் பயன்படுத்தி கூட்டாக மீன்பிடித்தனர். அப்படி பிடித்த மீன்களைப் பகிர்ந்து கொண்டனர். பாக்கத்தில் வாழ்ந்து வந்த மக்கள் மீன் பிடித்தொழிலுடன் கடல் நீரை கழிவாகத் தேக்கி வெயிலில் காயவைத்து உப்பு எடுக்க கற்றுக் கொண்டனர்.

மீன்பிடிக்கும் தொழிலுக்குச் செல்லும் போது கடல் அலைகள் தனிந்து இருந்தாலும் ஓங்கியிருந்தாலும் தொடர் மழைபெய்தாலும் தாம் மீன்பிடிக்கும் தொழிலை விட்டதில்லை மீனவர்கள் என்பதை அம்பாப் பாடல் மூலம் அறியமுடிகிறது.

"காத்து உரக்குது
கருங்கடல் பொங்குது
தெப்பத்துல வலை ஏந்த்யிருக்குது
பெண்ணே நான் போய் வாரேன் - வலைபோட
பெண்ணே நான் போய் வாரேன்"

மீன்பிடிக்கும் தொழில் ஆரியச் செட்டி அல்லது ஆரிய நாட்டுச் செட்டி என்பவர்களால் ஆரம்பிக்கப்பட்டது ஆகும்.

நெய்தல் மகளிர்

நெய்தல் நில மகளிர் பரத்தியர், நுளைமகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் மெல்லிய உடல் அமைப்பினையும், அசைகின்ற கூந்தலையுடையவராயும் காணப்பட்டனர், வேல் போன்ற கண்பார்வை உடையவராகவும் இருந்தனர். பெண்களின் முக்கியத் தொழில் மீன்பிடித்தலும் அவற்றை உலர்த்துதலும் உப்பு எடுத்தலும் ஆகும்.

பெண்கள் தூண்டிலை இட்டும் வலை வீசியும் மீன் பிடிப்பர். தூண்டிலின் முள்ளில் மீனுக்குரிய இரையை வைத்து மீன் பிடிப்பர். பெண்கள் கடல்களிலும் ஆறுகளிலும் மீன் பிடிக்க படகுகளாகிற (திமிலில்) ஏறி மீன்பிடித்து வருவர். இவர்கள் சுறாமீன் பிடித்தலை சுறாமீன் வேட்டை என்பர். அவர்கள் எறிகின்ற வலைகளில் கயிறு கட்டப்பட்டிருக்கும்.

இரவிலும் மீன்பிடித்தல்

இரவு வேளைகளில் படகுகளில் வெளிச்சத்திற்காக மீன் நெய்யால் ஏற்றப்பட்ட விளக்கினை வைத்திருப்பர். எனவே இரவு நேரங்களில் கடலில் சென்று மீன் பிடித்தனர். கரையிலுள்ள சிறுவர்கள் வெளிச்சத்தின் தன்மையைக் கொண்டு தாங்கள் தந்தையர் படகு இது என்று கூறி மகிழ்ச்சிக் கொள்வர். இதற்கு நற்றிணை பாடல் உதாரணம்.

"அம்ம வாழி, தோழி! நன்னுதற்கு
பாங்கு ஆதின்று கொல் பசப்பே - நோன்புரிக்
கயிறு கடை யாத்த கடு நடை ஏறி உளித்
திண் திமில் பரதவர் ஒண் சுடர்க் கொளீஇ
நடு நாள் வேட்டம் போகி, வைகறை"

முறுக்குண்ட கயிற்றின் முனையிலே விரைந்து செல்லும் இயல்புடைய எறிகின்ற ஈட்டியையுடையவரும் படகில் சென்று மீன் பிடிப்பவர்கள் ஆண்கள். அவர்கள் ஒளி பொருந்திய விளக்குகளைக் கொளுத்திக் கொண்டு இரவு நடுயாமத்தில் மீன்பிடிக்க செல்வர். கடலிலிருந்து பெற்ற மீன்களை விடியற்காலையில் கொண்டு வருவர். அப்படி கொண்டு வந்த மீன்களைக் கடற்கரைச் சோலையில் குவித்துப் புன்னை மர நிழலில் அமர்ந்து தம் பிள்ளைகளோடு கள்ளைக் குடித்தும் ஆண்கள் மகிழ்வார்கள்.

"கடல் மீன் தந்து, கானற் குவை,
ஒங்கு இரும் புன்னை வரி நிழல் இருந்து
தேம் கமழ் தேறல் கிளையோடு மாந்தி
பெரிய மகிழும் துறைவன் எம்"

எனும் வரிகள் இதற்கு சான்றாகும்.

பரதவரின் வரமும் சாபமும்

பாரம்பரியமான தொழில்களைச் செய்து வாழும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமும், இனக்குழச் சமூகங்களிடமும் அவர்கள் தொழில்களைப் பற்றிய பிரத்தியேகமான வழக்காறுகள் வழங்குகின்றன. அவை பெரும்பாலும் மரபு கதையாகவும். புராணங்களாகவும் இருக்கின்றன. ஒருவகையில் இத்தகைய கதைகள் அந்தந்தச் சமூகத்தினரின் தோற்றம் ஒரு குறிப்பிட்ட தொழிலை எவ்வாறு முதன்முதலில் செய்யத் தொடங்கின என்பது பற்றி காரண விளக்கத்தை ஒருங்கிணைந்து கொண்டிருப்பவை.

பல்வேறு சமூகங்கள் தற்போது செய்து வரும் தொழில்களைக் கடவுளர்களின் சாபத்தின் காரணமாகத் தத்தமது தொழிலாக எவ்வாறு வரித்துக் கொண்டன என்பது பற்றிபல கதைகள் உள்ளன. இவ்வாறு மீன்பிடிக்கும் தொழில்கூட மீனவர்களின் பரம்பரைத் தொழிலாக அமைந்ததற்குக் காரணம் முருகன் கோயில் பூசாரியாக இருந்த மீனவ முன்னோர் ஒருவர். மீனவர் சமூக முன்னோராக வழக்காறுகளில் இடம்பெறும் ஒரு பெயர் ஆரியச் செட்டி அல்லது ஆரிய நாட்டுச் செட்டி என்பது. இவரை மையமாகக் கொண்டது தான் இக்கதை.

ஆரியநாட்டுச்செட்டியாஎன்பவர்முருகன் கோயில் பூசாரியாக இருந்தபோது முருகனுக்கு பூசை செய்ய அங்குள்ள குளத்தில் குளிக்க சென்றபோது குளத்தில் உள்ள அயிலை மீன்கள் அவரை சூழ்ந்துக் கொண்டது. அப்பொழுது அங்குள்ள மீன்களில் ஒன்றை பிடித்து தன் அரைஞாண் கயிற்றில் செருகிக் கொண்டு முருகனுக்கு பூசை செய்ய சென்றார். தன்னுடைய இடத்திற்கு மீனுடன் ஆரியச்செட்டி வந்தான். முருகன் சினங்கொண்டு அவர் முன் தோன்றி அரைஞாண் கயிற்றில் மீனினை செருகிக் கொண்டு நீ எனக்கு அர்ச்சனை செய்வது முறை அல்ல. இனிமேல்: எனக்கு பூசை செய்ய வேண்டாம். நீ கடற்கரைக்குப் போ. அங்குள்ள அடப்பங்கொடி பிடுங்கி வலையாக முடைந்து, கடலில் போட்டு இழு நிறைய மீன் கிடைக்கும். அதைக் கொண்டுபோய் விற்று உன் குடும்பத்தை நடத்து என்றும் முருகப்பெருமான் ஆரியச் செட்டிக்கு சாபம் இட்டார். அன்று முதல் அர்ச்சகராக இருந்த ஆரியச் செட்டியார்கள் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டார்கள்.

மீன் வணிகம்

ஆண்கள் கொண்டு வரும் மீன்களை மகளிர் வெய்யிலில் உலர்த்துவர் அப்படி உலர்த்தும்போது மீனை கவர வரும் பறவைகளை விரட்டுவர் மகளிர் இரவில் மீன்; குவியல்களுக்கு பக்கத்தில் மீன் நெய்யை வார்த்து எரியவிட்ட கிளிஞ்சல்களில் விளக்குகளை வைத்து அதன் பக்கத்தில் காவல் புரிவர்.

பரதவர்கள் தாம் பிடித்து வந்த மீன்களிலும், உற்பத்தி செய்த உப்பிலும் தமது தேவைக்குப் போக மிஞ்சியவற்றைப் பிற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் மற்ற நிலமக்களோடு பண்டமாற்று முறை செய்து கொண்டனர். மீனுக்கு வெண்நெல்லும் உப்புக்கு நெல்லும் என்று பண்டமாற்று இருந்தது.

மீன், உப்பு, பண்டமாற்று முறையில் பரதவர்கள் மக்களில் ஈடுபாடு இருந்தது. கழுதைகளின் மீதும், வண்டிகளிலும் உப்பினையும் காய்ந்த மீனையும் ஏற்றி வந்து பண்டமாற்று செய்து கொண்டனர். பண்டமாற்று செய்து வரும் பொறுப்பினை ஏற்ற உமணர்களுக்கு அதுவே தொழிலாயிற்று. அரியப் பொருட்களை பண்ட மாற்று செய்யப்பட்டன. மீனவர்களின்; பொருளாதாரம்மேம்பட்டது. செல்வம் வாணிபப் பெருக்கத்திற்காகவும் வழித்துணைப் பாதுகாப்புக்காகவும் குழுக்களாக சேர தொடங்கின. அவர்கள் வணிக வர்க்கமாக வணிகர்களாக தோற்றம் பெற்றனர்.

செல்வம் பெருக பெருக கடற்கரையை ஒட்டிய வசதியான ஊர்களிலும் குடியேறி வாணிபத்தைப் பெருக்கினர். அவ்வாறு வாணிபத்தைப் பெருக்கி வந்த ஊர்கள் கொற்கை, பூம்புகார், முசிறி, தொண்டி,

காயல்பட்டிணம் போன்ற கடற்கரைப் பட்டினங்களாக வாணிப நகரங்களாக மாறின என்பதாகும்.

கடலில் மீன்பிடிக்க வலை வீசிய போது வலையில் முத்து, சிற்பி, சங்குகளும் கிடைத்தன. அதனை நல்ல விலைக்கு வணிகர்கள் விற்றனர். இப்படிப்பட்ட பொருட்களை கடலில் முழ்கியெடுக்கும் தொழிலை வணிகர்கள் ஊக்குவித்தனர் முத்துக்குளிக்கும் பணியில் பரதவர்கள்; ஈடுபட்டனர்பரதர் என்ற பெயர் வணிகர்கள், வைகியர்களைக் குறிக்கும். மீன்பிடிக்கும் பரவர் குலத்தைச் சார்ந்தவர்களின் ஒரு பிரிவு, உமணர்களாகி, வணிகர்களாக மாறியதை ஆதாரங்கள் உணர்த்துகின்றன.

பிற தொழில்கள்

நெய்தல் நில மக்கள் கடலில் சங்கு மற்றும் முத்துக்களை தொகுத்து எடுத்தும் அந்த சங்குகளை வளையல்களாக அறுத்து எடுத்தலும் இவர்களின் பிற தொழில்கள் ஆகும்.

உப்பு விளைவித்தல் இவர்களின் பெருந்தொழில்களில் ஒன்று. உழாமலேயே உவர் நீரைப் பாத்திக் கட்டி உப்பை விளைவித்தலினால் உவர் உப்பின் உழா யுவர் என்கிறார் உலோச்சனார். உப்பெடுத்து வாணிகம்; செய்யும் மக்கள் 'உமணர்' என்றழைக்கப்பட்டனர்.

வண்டிகளில் உப்பை ஏற்றி மருதநிலத்து ஊர்களில் சென்று விற்று வருவர். இவர்கள் வண்டியின் தன்மையும் அதில் ஏற்றுச் சென்ற பொருள்கள் முதலியவற்றை பெரும்பாணாற்றுப்படை விரிவாகக் கூறுகிறது.

மேடுபள்ளங்களில் செல்லும்போது வண்டியின் அச்சு முறிந்து விடாதபடி மரத்தின் அடிப்பகுதி தண்டினை அச்சாக இணைத்திருப்பர். அதுமட்டுமல்லாமல் உப்பு வண்டிகள் வரிசையாகச் செல்வதை உமணர் ஒழுங்கு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் செல்லும் வழியில் வண்டியில் பூட்டிய பகடுகளில் ஏதேனும் ஊனமாகிவிட்டால் அவற்றை அவிழ்த்துப் பாதுகாக்காமல் அப்படியே விட்டுச் செல்வர். இதற்கு புறநானூற்றுப் பாடல்,

"நீரும் புல்லும் ஈயாது, உமணர்
யாரும் இல்ஒருசிறை, முடத்தொடு துறந்த
வாழா வான் பகடு ஏய்ப்ப"

முடிவுரை

பண்டைய தமிழர்களால் பகுத்து அறியப்பட்ட நிலம் நெய்தல் 'திரை கடல் ஓடியும் திரவியல் தேடு' என்னும் ஔவையார் வாக்கிற்கேற்ப அலைகளையும், பல தடைகளையும் கடந்து இந்நிலமக்களின் வாழ்வு போராட்ட களமாகவே இன்றளவும் நீள்கிறது. விலையுயர்ந்த முத்துக்களை உலகிற்கு கொணரும் மீனவ வாழ்வு இன்றளவும் உச்சி தொட முடியாததாக உள்ளது. எனினும் அவர்களின் முயற்சியும் போராட்ட குணமும் பிறர் நலம் பேனும் பண்பும் உயர்ந்த உள்ளங்களாக சித்தரிகின்றன. மீனவ மக்களின் பிற தொழில்கள் வாழ்வாதாரம் மீன் பிடி தொழிலில் உள்ள சிறப்பையும் சிக்கலையும் கட்டுரையில் ஆய்ந்து முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. நெய்தல் நில வாழ்வு பரதவரைத் தவிர்த்து பிற நிலத்தவர்க்கு கலங்கரை விலக்கு எனில் மிகையன்று.

References

1. Yumapuranar (U.A.), Tolkappiyam, Mahatadikaram, No. 3.
2. Yumapuranar (U.A.), Tolkappiyam, Mahatadikaram, no. 4.
3. Yumapuranar (U.A.), Tolkappiyam, Mahatadikaram, no. 14.
4. P.V.Somachandaram (U.A), Purananur, B.No. 2, year of edition. 2007.
5. P.V.Somachandaram (U.A), Purananur, Pa.No. 41, edition year. 2007.
6. Yumapuranar (U.A.), Tolkappiyam, Mahatadikaram, No. 205.
7. NARTINI PA. NO. 101, edition year. 2007.
8. Thananjeyan, a Study of Fisherman Songs of Thanjavur District, Pa. No. 13. Edition year 1985.
9. Duraisamipillai Olaivai, Su. (U.A.), Journal, Pa. No. 388, Edition year. 1967.
10. Duraisamipillai Olaivai, Su. (U.A.), Journal, Pa. No. 388, edition year. 1967.